வழிகாட்டுதலின்படி நடக்கின்ற இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

வனச் சாலை

***37735—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, சுருளியாறு மின் நிலையத்திலிருந்து மகராஜமெட்டுக்குப் புதிய தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற சிந்தனையோடு தமிழகத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் இதய தெய்வம் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதி, சுருளியாறு மின் நிலையத்திலிருந்து மகராஜமெட்டுக்குப் புதிய தார்ச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

2014 டிசம்பர் 5]

முற்பகல் 11–20

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையை மீட்டெடுத்த மகாசக்தி; பென்னி குயிக்கின் மறுபிறப்பு; அன்பு, அறிவு, துணிவு இம்மூன்றையும் ஒருங்கே பெற்ற தன்னிகரில்லாத் தலைவி; (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் இதயங்களில் குடியிருக்கும் காவல் தெய்வம்; கனிவும், கம்பீரமும் இரண்டறக் கலந்த காவியத் தாய்; உலகமே வியக்கும் மக்களின் முதல்வர்; நம் இயக்கத்தின் உயிர் மூச்சு; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

இன்று கார்த்திகை தீபத் திருவிழா. ஆனால், தென் மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கோ நவம்பர் 21 ஆம் தேதியே தீபப் பெருவிழா; ஆம்! மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சியங்களில் ஒன்றான, 36 ஆண்டுகளுக்குப் பிறகு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டிய நாள். இந்தப் பெருமை உத்தமத் தாய் எங்கள் அம்மா அவர்களை மட்டுமே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட Highwavys Estate பகுதி, சுவிட்சர்லாந்து நாட்டிற்கு இணையான ஒரு சுற்றுலாத் தலம். தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் மிகப் பிரசித்தி பெற்ற இடம் அந்த Highwavys Estate பகுதி. அங்கே ஏழு எஸ்டேட்டுகள் இருக்கின்றன. அங்கே செல்வதற்கு உள்ள சாலையில், 52 கிலோ மீட்டர் தூரமுள்ள தார் சாலை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. நமது மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் அந்தச் சாலையை சீர்செய்து தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது, 'செய்து தருகிறேன்' என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அதே சமயம் சுருளியாறு மின் நிலையத்திலிருந்து மகராஜமெட்டு என்ற அந்த ஹைவேவிஸ் பகுதிக்கு 12 கிலோ மீட்டர் தொலைவிற்குத் தார் சாலை அமைக்க வாய்ப்புகள் இருக்கின்றன. அது வனப் பகுதிதான், நான் ஒத்துக்கொள்கிறேன். கேரளா முழுவதும் வனப் பகுதியிலேதான் இருக்கிறது. கேரளாவில் சுற்றுலாத் துறையின்மூலம் ஆண்டு வருமானமாக 380 கோடி ரூபாய் அளவிற்குச் சம்பாதிக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் வனப் பகுதிகளுக்குள் சாலைகள்

அமைப்பதில், மற்ற அமைப்புகளை ஏற்படுத்துவதில் சிக்கல் இருப்பதாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார். மத்திய அரசிடம் முறையாக அணுகி, நமது தமிழ்நாட்டில் இருக்கிற வனப் பகுதிகளில் சுற்றுலாத் தலங்களை அமைத்தால், அரசுக்கு இன்னும் வருவாய் கூடும்; அந்த ஏழு எஸ்டேட் பகுதி மக்களும் பயன்பெறுவார்கள்; விவசாயமும் செழிக்கும் என்பதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு, ஆய்வுக்கு எடுத்து, அந்தச் சாலையைச் சீரமைக்க வேண்டுமெனப் பணிவன்போடு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், மேகமலை வன உயிரினக் கோட்டம், கூடலூர் வனச் சரகத்திலுள்ள வண்ணாத்திப் பாறை காப்புக் காட்டில், சுருளியாறு மின் நிலையத்திலிருந்து மகராஜமெட்டுக்கு 15 கிலோ மீட்டர் தூர சாலை, 1975–ல் மின்சார வாரியத்தின் மூலமாகப் போடப்பட்டுள்ளது. இத்தார்ச் சாலையில் முதல் 7.5 கிலோ மீட்டருக்குப் பிறகு பெரும் செங்குத்தான பாறை குறுக்கே வருவதால், சுமார் 600 மீட்டர் தூரம் வின்ச் இயக்கப்படுகிறது. அதன் பின்னர், 6.8 கிலோ மீட்டர் தார்ச் சாலையாகவும் உள்ளது. இதில் சுமார் 40 மீட்டர் தூரம், மகராஜமெட்டு பகுதியிலுள்ள* Highwavys *காப்பு நிலத்தில் வருகிறது. இந்த வனப் பகுதிக்குள் சாலை அமைக்க, பராமரிக்கக் கோரி பயனீட்டார் துறையிடமிருந்து இதுவரை எந்தவிதமான பிரேரணையும் பெறப்படவில்லை. எனவே, உரிய பயனீட்டார் துறையிடமிருந்து பிரேரணை பெறப்படும்பட்சத்தில், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்கீழ் ஆய்வு செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்றால்,

2014 டிசம்பர் 5]

நிச்சயமாக இந்தச் சாலையைப் போடுவதற்கு அனுமதி கிடைக்கும். நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சருக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

29—

சுற்றுச்சூழல் பாதிப்பு

***44344—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம், கோரைக்கூட்டம், மேலப்புதுக்குடி, கீழ்புதுக்குடி, பிச்சாவலசை ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீரைப் பாதிக்கும் தனியார் இறால் பண்ணைகளைத் தடை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் இதய தெய்வம், முல்லைப் பெரியாறை வென்று தமிழக விவசாயிகளின் காவல் தெய்வமாக வாழ்ந்து வருகிற கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பாதங்களை வணங்குகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோரைக்கூட்டம், சின்னக்கோவில், மேலப்புதுக்குடி, கீழ்புதுக்குடி, பிச்சாவலசை மற்றும் சேதுக்கரை கிராமங்களிலே செயல்படுகிற சிறிய அளவிலான இறால் பண்ணைகள் அரசுத் துறை அனுமதியில்லாமல் அவ்வப்போது இயங்கி வருகின்றன. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலே, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் வருவாய்த் துறையின் மூலமாக, இப்படிப்பட்ட இறால் பண்ணைகளை ஒழுங்குபடுத்த, மக்களின் முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு செயல்படுகிற மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது